ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

13.02.2025

1. வள்ளலாய் வடிவேலனாருமாய்
வகைபட காட்சி சோதியில்
வல்லமைபட தந்து அரங்கனும்
வணங்கும் என் மக்களை காக்க

2. காக்க அருட்சுவடி வழியில்
கண்டுரைக்க வந்தேன் அருளாசி
ஆக்கமுடன் குரோதி சால் திங்களில்
ஆதி குருவார அருளாசி தன்னை

3. தன்னிலே என் பலம் பெற்றனர்
தைப்பூச முழுமதி விழாவினில்
அன்னதானமுடன் அனைத்து வகை
அன்பர்களின் சேவைகளை கண்டு

4. கண்டு அரங்கன் யானும்
களிப்புற்று ஆசி தந்தேன்
உண்டான என் தடம் தன்னில்
உணர்வுடன் வருபவர்க்கு எல்லாம்

5. எல்லாம் பூரணத்துவம் காண
என் அறையில் மெழுகு பிம்ப
வல்லமை மிக்க வனப்பு கூடிய
வையகத்தில் என் சிலை வைக்க

6. வைக்கவே நல் உத்தரவை
வழங்குகிறேன் அரங்கனும்
தக்கபடி வருகின்ற சித்ராபௌர்ணமி
தக்க விழா காலம் தன்னுள்

7. உள்ளாக ரூபம்தன்னை தர
உண்மைபட அரங்கன் எனை
வல்லமைமிக்க வடிவில் கண்டு
வருபவரெல்லாம் முழுமை அடைவர்

8. அடையவே அரங்கன் என்
அறைதனில் சில மாற்றமதை
தடையின்றி செய்ய அனுமதி
தவசி யானே தந்தருளினேன்

9. அருளவே அற்புதம் பலவும்
அரங்கன் யானே ஆக்கம்பட
வரமாக அருளி நின்றுமே
வையகம் எங்கும் சன்மார்க்கம்

10. சன்மார்க்கம் அரங்கன் நல்மார்க்கமாக
சர்வ பூமியும் நிரம்பச் செய்து
நன்மை தரும் புவியாக மாற்றுவேன்
ஞானிகள் எல்லாம் வெளிப்பட்டு

11. வெளிப்பட்டு வேலவன் தலைமை
வையகம் கண்டிட ஞான ஆட்சி
வெளிப்பட்டு வழிநடத்த அருள்வேன்
வழங்கிய குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி